
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

| மலர் 6 | மார்ச் 1993 | இதழ் 3 |
|---|---|---|


வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்

வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வு வகுப்புகள்

வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## தலைப்புச் செய்திகள்


1. மரணத்திற்குப் பின்னே.. 1-8
2. கள்ளப்போதகன் யார்? 9-12
3. நான் என்ன செய்யவேண்டும்? 13-18
4. ஜெபம் செய்ய குழந்தைகளுக்குக் கற்றுத்தருவோம் 19-23
5. சத்தியம் உங்களை விடுதலையாக்கும் 24-25
6. நமது கர்த்தரும், நமது விசுவாசமும் 26-28

# THIRUMARAIAASAAN

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ

2, Manalmedu Street, ERODE-638 002, Tamilnadu, India:

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 March—1993 Issue 3


## மரணத்திற்குப் பின்னே...

ஆரம்பகாலந்தொட்டே மரணம் என்பது மனுக்குலத்துக்கு பெரும் அதிர்ச்சியையும், தாங்க முடியாத துக்கத்தையும் அளவு கடந்த வேதனையையும் கொடுக்கின்ற ஒரு செயலாக இருந்துள்ளது. மரணம் ஒரு மனிதனைச் சந்திக்கும் பொழுது, அவனுடைய செல்வத்தையோ, கல்வியையோ, செல்வாக்கையோ, பதவியையோ, பட்டங்களையோ, சமுதாய நிலையையோ குடும்பச் சூழலையோ கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இந்தப் பூவுலகில் மானிடராய் பிறந்த எல்லோருக்கும், எந்த விதமான பேதமும் இல்லாமல் கட்டாயம் சம்பவிக்கும் ஒரு செயல் தான் மரணம். மனிதனுடைய உடல் அமைப்பு, அதன் செயல்பாடு ஆகியவற்றை நாம் உற்று நோக்கினால், அது தேய்ந்து, உருக்குலைந்து, அழிவுக்கு ஏதுவானதாகவே உள்ளது என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ளமுடியும். இந்த சரீர அழிவாகிய மரணம் எல்லோருக்கும் நிச்சயம் என்பதைத் தான் எபிரேய ஆசிரியர், "**அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே**" என்று கூறுகிறார். (எபி 9:27).

சரி, இப்படிப்பட்ட மரணத்தின் மூலமாக, நம்மால் மிகவும் நேசிக்கப்பட்டவர்கள், இரத்தம் கலந்த உறவுகள், ஆருயிர் நண்பர்கள் நம்மைவிட்டு கடந்து போகும் பொழுது **நம்மால் பல கேள்விகள் எழுப்பப்படுவதுண்டு.** அவர்கள் இன்னும் வாழ்ந்து

கொண்டுள்ளார்களா? (Still in existence). அவர்கள் இன்னும் நினைவுள்ளவர்களாக இருக்க முடியுமா? (Conscious). அவர்கள் பூமியில் விட்டுச் சென்றவர்களை காண முடியுமா? பூமியில் என்ன நடக்கிறது என்பதை அவர்களால் அறிந்து கொள்ளமுடியுமா? ஏதாவது ஒரு வகையில் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியுமா? கர்த்தருக்குள் மரிக்காதவர்களின் நிலையை மாற்ற பூமியிலிருந்து ஏதாவது செய்ய முடியுமா? இப்படி இன்னும் பல கேள்விகள்,

முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு எனும் இவர்கள் வாழ்ந்த கால கட்டத்தில் அல்லது அதற்கு முன்னரே வாழ்ந்தவர் என்று கருதப்படுகின்ற பொறுமையின் சின்னமான யோபு, **''மனிதன் செத்தபின் பிழைப்பானோ?''** என்று வினவுகிறார். (யோபு 14;14). அது மாத்திரம் அல்ல, **''மனுபுத்திரன் ஜீவித்து போன பின் அவன் எங்கே?''** என்றும் கேட்கிறார், (14:10) திருமதி யோபுவே, ''தேவனைத் திட்டி தீர்த்து ஜீவனை விடும்'' என்று சொன்ன நிலையிலும், தேவனுக்கு முழுமையாகப் பயந்து அவர்தம் சித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்த மாமனிதனாகிய யோபு இப்படியெல்லாம் கேள்விகளை எழுப்பியிருந்தாலும், **''மரணத்திற்குப் பின் என்ன''** என்பதற்கு வேதாகமம் போதுமான அறிவுரை கொடுப்பதாகவே உள்ளது.

மரணத்தைப் பற்றி பூரணமாகத் தெரிந்து கொள்வதற்கு முன், மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அறிந்து கொள்வது அவசியம். மனிதன் **தேவனுடைய சாயலாகப்** படைக்கப்பட்டுள்ளான் **தேவனோ ஆவியாயிருக்கிறார்**. (யோவா 4:24). மனிதனுக்குள்ளாக இருக்கின்ற ஆவி, அழிவில்லாத தன்மையைப் பெற்றிருக்கும் தேவனிடத்திலிருந்து வருகிறது. (1 தீமோத் 1:17) மனிதனின் சரீரம் சாவுக்கேதுவானது. (ரோம 8:11). தானியேல் தீர்க்கன் சொல்லும் பொழுது,''நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன்'' என்கிறார் (தானி 7:15). அதாவது, தேகமாகிய சரீரத்தையும், ஆவியையும் வேறுபடுத்தியே சொல்கிறார் ஆக **மனிதன் என்பவன், அழியாத்தன்மையுடைய ஆவியையும், அழியும் தன்மையுடைய சரீரத்தையும் பெற்று விளங்குகிறான்.**

மரணம் என்பது புறம்பான மனிதனைத் தான் தொடமுடியுமே தவிர, உள்ளான மனிதனை அல்ல (II தீமோ 4:6). உள்ளான மனிதனாகிய ஆவி எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறது **ஆவியானது அழியும் தன்மை உடையது அல்ல.** (சங் 22:26, மத் 10:28). பேதுருவும் ஆத்துமாவின் அழியாத் தன்மையை அறிந்தபடியினால் தான், ''.. நான் என் கூடாரத்தை விட்டு போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து'' .. என்கிறார்.

சரீர மரணம் என்பது ஆவியும், சரீரமும் பிரிக்கப்படுகின்ற ஒரு நிலைதான். **இருக்கின்ற ஒருவன் இல்லாமல் போவதென்பது** இதன் பொருள் அல்ல. யாக்கோபு ஆசிரியர் சொல்லும் பொழுது, "அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது" என்கிறார். அவர் சரீரம் இல்லாத ஆவி செத்ததென்று சொல்லவில்லையென்பதை நாம் **கூர்ந்து கவனிப்பது** அவசியம். ஆக, வேத வாக்கியங்களின்படி **இருந்தவன், "இனிஇல்லை"** என்ற பேச்சுக்கே இடமில்லை.

புதிய ஏற்பாட்டின் மூல மொழியாகிய கிரேக்கத்தில், மரணத்தைப் பற்றி ஒரு விளக்கம் இவ்வாறாக உள்ளது. நங்கூரம் பாய்ச்சப்பட்டு, கட்டப்பட்டிருக்கிற ஒரு கப்பல், அக்கரைக்குப் போகும்படி கட்டவிழ்க்கப்படுகின்ற ஒரு செயலைக் குறிக்கிறது. இதன் மூலம் மரணம் என்பது கடந்து போதல் (Passing away) என்று தெரிகிறது.

நாம் வாழும் இன்றைய காலகட்டத்தில் மரணத்தைப்பற்றி மாறுபட்ட கருத்துக்களும் விளக்கங்களும் இருப்பதைப் போலவே நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் வாழ்ந்த காலத்திலும் இருக்கத்தான் செய்தது. யூத மார்க்கத்தில் பரிசேயர்களின் பக்தி வைராக்கியத்திற்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்று கருதப்பட்ட, சதுசேய கூட்டத்தார் **மரணம் ஒரு மனிதனின் முடிவான முடிவு** என்றே நம்பினர். ஆகவேதான் ஏழு சகோதரர்களை ஒருவர் பின் ஒருவராக மணந்து கொண்ட ஒரு பெண்ணின் நிலை. உயிர்த்தெழுதலில் என்ன ஆகும் என்று வினா எழுப்பி நமதுதாண்டவரை மடக்கப்பார்த்தனர்.

ஆனால், முட்செடிதனில் தேவன் மோசேக்குத் தரிசனமான போது நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்றார். (யாத் 3:2-6) அவர், **பிதாக்களின்தேவனாயிருந்தேன்** என்று கடந்த காலத்தில் பேசாமல் **தேவனாயிருக்கிறேன்** என்று நிகழ்காலத்தில் பேசுகிறார். அச்சமயத்தில் முற்பிதாக்களாகிய அவர்கள் மரித்து 300ஆண்டுகளுக்குமேலாகியும் இன்னும் வாழ்ந்து கொண்டுள்ளவர்களாகவே தேவனால் சொல்லப்படுகிறார்கள். ஏன்?

வேத வாக்கியங்களின் ஆலோசனைப்படி தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு உத்தமமாய் ஜீவிக்கிற ஒரு தேவப் பிள்ளையை மரணம் சந்திக்கும் பொழுது, அந்த நிமிடத்தில் தானே அவன் காணக்கூடாத ஒரு உலகத்திற்கு இளைப்பாறும் படியாகச் சென்று

விடுகிறான். உருக்குலைந்து போகும் சரீரத்தோடு அவன் கல்லறையில் இருப்பதில்லை. கடைசியாக மரித்த அப்போஸ்தலன் என்று கருதப்படுகின்ற மூப்பனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட பொழுது, ''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது, அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள், அவாகளுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்'' என்கிறார். (வெளி 14:13)

ஆக, சரீர மரணத்திற்குப் பிறகும் ஒருவனுடைய ஆத்துமா வாழ்ந்து கொண்டுதான் உள்ளது.

சரி, சரீர மரணத்திற்குப் பிறகும் ஆத்துமா வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறது என்றால், அவர்கள் உணர்வும், ஞாபகமும் உள்ளவர்களாக இருக்க முடியுமா? இந்த கேள்விக்கான பதிலைப் புரிந்து, விளங்கிக் கொள்வதில் கொஞ்சம் பிரச்சனை இருந்தாலும் உணர்வும் ஞாபகமும் இருப்பதாகவே வேதாகமம் சொல்கிறது. லாசரு, ஐசுவரியவான் உவமையில் நாம் அதை தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும் (லூக் 16;20-31) லாசரு, ஐசுவரியவான் இரண்டு பேரும் மரிக்கின்றனர். பரதீசில் (Paradisa) இருந்த லாசரு, ஆபிரகாமின் மடியில் விடப்படுகிறான், ஐசுவரியவான், பாதாளத்தின் (Hades) வேதனை நிறைந்த பகுதியில்(Tartarus விடப்படுகிறான். வசனம் 25-ல் ஐசுவரியவான் தண்ணீர் கேட்டபொழுது, நீ பூமியில் செய்தவைகளை ''நினைத்துக் கொள்'' அதாவது ஞாபகப்படுத்திக் கொள் என்று சொல்லப்படுகிறான்.

அது மாத்திரமல்ல வசனம். 27-ல் எனக்கு ஐந்து சகோதரருண்டு, அவர்களுக்கு சத்தியம் சொல்ல லாசரு அனுப்பப்பட வேண்டும். என்கிறான். பூமியில் தாங்கள் விட்டுவந்த செயல்களைக் குறித்த நினைவு இருப்பது ஆச்சரியமாக உள்ளதா? இன்னும் கீழுள்ள வசனங்களை வாசிப்போமானால் அங்கு ஒரு அருமையான உரையாடலே நடக்கிறது. உவமை தானே என்கிறீர்களா? உவமைகள் பரலோகத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தத்தானே நமதாண்டவரால் சொல்லப்பட்டன.

மேலும், இதே பகுதியில் லாசரு தேற்றப்பட்டான் என்றும் ஐசுவரியவான் வேதனைப்பட்டான் (வ.22) என்றும் சொல்லப்படும் பொழுது அவர்கள் உணர்வற்றவர்களாக இருந்தால் தேற்றப்படுதலும் வேதனைப்படுதலும் எப்படித் தெரியும்? இனியும் உங்களுக்கு சந்தேகம் இருக்க வாய்ப்பில்லை என்று நம்புகிறேன். மரித்துப் போனவர்களுக்கு, தாங்கள் வாழ்ந்த காலத்தில் நடந்தவைகள் நினைவில் இருக்குமேயொழிய, இன்றைக்கு

பூமியில் நடக்கிற காரியங்களைக் குறித்து அறிந்து கொள்ள நிச்சயமாய் வாய்ப்பில்லை. வேதாகமம் இதைக் குறித்து எங்கும் பேசவில்லை. நாம் இதிலே குழப்பமடைய அவசியமில்லை.

மரித்துப் போனவர்கள் என்றென்றும் பாதாளத்தின் பகுதிகளில் இருப்பதில்லை. பின்பு உயிர்த்தெழுதல் நடக்கும். கிறிஸ்துவ மார்க்கத்தின் போதனைகளுக்கு மணி மகுடமாக இருப்பது உயிர்த்தெழுதல்தான். தாவீது அரசன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து முன்னறிவித்தபோது (சங் 16:10) கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்தில் விடப்படுவதில்லையென்றும் அவருடைய சரீரம் அழிவைக் காண்பதில்லையென்றும் சொல்கிறார். (அப் 2:31) அதாவது, அவருடைய ஆத்துமாவும், சரீரமும் பிரிகின்ற நிலைமை தற்காலிகமானதே என்று உணர்த்துகிறார் அதுப்போலவே இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்தபொழுது அவருடைய ஆத்துமாவும் சரீரமும் ஒன்று சேர்கிறது. மூன்றாம் நாளிலே அவரை அடக்கம் பண்ணின கல்லறை திறந்து கிடந்தது என்பதை நாமறிவோம் (லூக்கா 24:23) இன்றைக்கு என்னுடனே கூடப் பரத்திலிருப்பாய் என்று கள்வனிடத்தில் சொன்ன கிறிஸ்துவானவர், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இன்றைக்கு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம். (மாற் 16:19) ஆனால் அந்தக் கள்வனின் ஆவியோ இந்த மணி நேரம் வரைக்கும் பரத்தில்தான் இருக்க முடியும்.

மீண்டும் கிறிஸ்துவானவர் வரும்பொழுது பாதாளத்தின் ஆவிகள் வெளியே வரும் ''பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்'' பிரேதக் குழிகளில் இருந்து எழுந்திருக்கும்பொழுதே மரித்தவர்கள் தங்கள் கிரியைகளின் பலனுக்கேற்றவாறுதான் எழுந்திருப்பார்கள் அதைத்தான் யோவான் ஆசிரியர் நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என்கிறார், (யோவா 5:28, 29)

உயிர்த்தெழுதல் நடக்கும்பொழுது எப்படிப்பட்ட சரீரத்தோடு மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள்? உயிரோடு இருக்கிறவர்கள் எப்படிப்பட்ட சரீரத்தோடு நியாயத்தீர்ப்புக்குப் போவார்கள்? என்று நாம் சிந்திப்பது நியாயமே. அதைத் தான்

பவுலடியார், "மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது" என்கிறார்(1 கொரி 15:50). அதை மேலும் விளக்கும் பொழுது "இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று சொல்கிறார் "எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று கூறுகிறார் (1 கொரி15:52) மறுரூபமாக்கப்படும் செயல் "ஒரு இமைப் பொழுதிலே" நடக்கும் என்று சொல்லப்படுகிறது அது எப்படி நடக்கும் என்று நாம் நினைக்க கூடும் வானத்தையும், பூமியையும் அதிலுள்ளயாவற்றையும் வார்த்தையினாலே படைத்த தேவனுக்கு இது ஒன்றும் பெரிய காரியம் அல்லவே?

சரி, அடுத்தது நியாயத்தீர்ப்பு நியாயத்தீர்ப்பு என்று சொன்னவுடனேயே நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது. ஏனெனில் வரப் போகும் நியாயதிபதி நீதியுள்ளவர். இந்த உலகத்திலே நீதியும், நியாயமும் தடம் புரண்டு செல்வது வாடிக்கையாகிவிட்டது ஆனால் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு சகல நீதியோடும் விளங்கும் அங்கே இரக்கத்திற்கு வழியில்லை. நியாயத்தீர்ப்புக்கு உண்டான சட்டப்புத்தகம் வேதாகமம்தான். சட்டங்கள் வேத வசனங்களே யொழிய வேறல்ல (யோவா 12:48).

கிறிஸ்துவானவர், மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது பூமியின் சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர் அவர்களை பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார் (மத் 25:31-33).

இராஜாவாகிய கிறிஸ்து தமது வலது பக்கத்திலே நிற்பவர்களைப்பார்த்து "வாருங்கள் என் பிதாவினால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பார். (மத் 25:34) அந்த ராஜ்யம், "மகா இன்ப நகரம் அதன் பேரழகை வர்ணிக்க வார்த்தைகளில்லாமல் தடுமாறித்தான், பவுலடியார் இப்படி சொல்கிறாரோ? "எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை காது கேட்கவுமில்லை அவைகள் மனிதனுடைய

இருதயத்தில் தோன்றவுமில்லை என்கிறார் (1 கொரி 2:9) மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று சொல்லும் பொழுது பரலோகத்தின் மகிமையான அமைப்பை மனிதன் தன் கற்பனை வளத்தால் வளைத்துப் போடமுடியாது என்று நினைத்தாரோ?

இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் சபிக்கப் பட்டவர்களே என்னைவிட்டு பிசாசுக்காவும் அவன் தூதர் களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் ''என்கிறார் (மத் 25:41) நரகத்தின் வேதனை உலகத்தின் எந்த வேதனையோடும் ஒப்பிட முடியாதது சிருஷ்டிப்பின் ஆரம்ப முதலே, தேவனோடு எதிர்த்து நின்ற பிசாசுடன் நாமும் சேர்ந்து கொள்ளப் போகிறோமா?

நிதானித்துப் பார்க்க வேண்டியது யாதெனில் ஜீவனாக இருந்தாலும், ஆக்கினையாக இருந்தாலும் அவைகள் நித்திய-மானது (மத் 25:46) ஒருகுறிப்பிட்ட கால அளவோடு முடிவது அல்ல ஜாக்கிரதையாக முடிவெடுக்க வேண்டியது அவசியம். இனியும் நாம் ஏனோதானோ என்று இருக்க முடியாது.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே! எப்படிப்பட்ட-தான மரணத்தை சந்திக்க நாம் ஆயத்தமாக உள்ளோம்? மரணத்-திற்குப் பிறகு மனந்திரும்ப வாய்ப்பில்லை. பூமியில் தானே அந்த வாய்ப்பு. பயன்படுத்துவோமா?

லாசரு, ஐசுவரியவான் உவமையில் பெரும் பிளவு இருப்பதைப் போல இந்தப் பூமியிலும் பெரும் பிளவு உள்ளது ஒருபுறம், தேவனின் இரட்சிப்பின் திட்டத்தை ஏற்று ஜீவிக்கும் பரிசுத்தவான்கள் எதிர் புறம், பாவத்தின் இன்பத்தில் திளைத்து அழிந்து கொண்டிருக்கும் பிசாசின் கூட்டம்.

ஆனால், ''இரண்டு பெரும் பிளவுக்கும் ஒரு மா-பெரும் வித்தியாசம் உள்ளது. அந்த மாபெரும் வித்தியாசம் தேவனால் மனுக்குலத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சொல்ல முடியாத ஈவு. ஆம், பாதாளத்தின் பெரும் பிளவு கடக்கமுடியாதது. பூமியில் உள்ள பெரும் பிளவு கடக்கக்கூடியது.

தேவன் தம்முடைய ஒரே பேறான தேவமைந்தனை இந்தப் பூமிக்கு அனுப்பி, கொடுமையான சிலுவை மரணத்தை ஏற்கும்படி செய்ததால், பாவிகளாகிய நாம் இந்தப்

**பூமியில் உள்ள பெரும் பிளவைக் கடந்து மகிமையை சுதந்தரித்துக் கொள்ளும் பெரும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.**

*மரணம் யாருக்கு, எப்பொழுது என்று தெரியாத நிலையில் நாம் ஜீவித்துக் கொண்டுள்ளோம்.* **மெய்க் கிறிஸ்தவர்களாக** *மாறி, சாட்சியாக வாழாத நிலையில், நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று இந்தப் பூமியில் சொல்லிக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. நோக்கமும், தெளிவும் இல்லாமல் வாழ்கின்ற அறிவிலி-களாகவே இருப்போம்.*

*இந்தப் பூமியில் கிறிஸ்தவனாக ஜீவிக்க விரும்பும் அனைவர் ஆசையும் ''பரலோகமே'' அந்தப் பரம கானானை அடைய ஒரே வழி* **கிறிஸ்து காட்டிய இரட்சிப்பின் திட்டத்துக்குள் வருவதே.** *மனித கோட்பாடுகள் மாயையானவை. அவைகளின் முடிவு அழிவு. வேதத்திற்கு விரோதமானது விருதா, சத்தியத்திற்கு விரோதமானது அபத்தம்.*

*நண்பரே! நம்முடைய நிலை என்ன? மெய்யான வழியைப் பின்பற்ற விலை கொடுக்கத் தேவையில்லை. எளிமையான வழியைக் கிறிஸ்து பெருமான் காட்டியுள்ளார். இதோ இரட்சிப்பின் வழி வசனத்தைக் கேளுங்கள் (ரோம 10: 14). வசனத்தைக் விசுவாசி-யுங்கள் (மாற் 16: 15, 16) பாவத்தை விட்டு மனந்திரும்புங்கள் (அப் 17: 30). இரட்சிப்புண்டாக வாயினால் கிறிஸ்துவை அறிக்கையிடுங்கள். (ரோம 9, 10). பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப் 2: 38).*

**''ஆம், ஒரு தரம் பிறப்பவன் இரண்டு தரம் மரிக்கிறான். இரண்டு தரம் பிறப்பவன் ஒரு முறை மரிக்கிறான்''**

**E.Z.S. ராஜநாயகம்.**

---

**பாவி**

**பாவஞ் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்-கிறான் ;**

**ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ் செய்கிறான் ;**

**பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும் படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.**

*1 யோவான் 3:8.*

# கள்ளப் போதகன் யார்?

## WHO IS A FALSE TEACHER?

தேவனுடைய வார்த்தையை போதித்துக்கொண்டிருப்பதாக பலர் இன்று உலகில் உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால் அவர்களில் பலர் கள்ளப் போதகர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் போதிப்பதில் உள்ள உண்மையை சோதித்து அறிய அவகாசமற்ற சாதாரண மனிதனை வெகு எளிதாக இவர்கள் ஏமாற்றி விடுகின்றனர். அவர்களுடைய உயர்ந்த கல்வி, நேர்மையான தோற்றம், போதிப்பதில் காட்டும் ஆர்வம் இவைகளைக் காணும் சாதாரண மனிதன், அவர்களை பெரிதும் மதிக்கிறான் அவர்கள் போதிக்கும் எதையும் கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக் கொள்ளுகிறான். இப்படியாகத்தானே, குருடன் குருடனுக்கு வழிகாட்டி கடைசியில் இருவருமே குழியில் வீழ்ந்து போகின்றனர். பரிதாபம்!

மத போதகர்கள் எல்லோரும் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்றே பலரும் நினைக்கின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. இந்த சந்தர்ப்பத்திலே, வேதாகமத்திலே கூறப்பட்டுள்ள சில எச்சரிக்கைகள் பற்றியும், கள்ளப் போதகனை அடையாளம் கான்பது எவ்வாறு என்றும் காண்போம். கவனமாகப்படியுங்கள். ''அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளதீர்க்கத்தரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்'' என்பதாக கிறிஸ்து எச்சரித்தார் (மத்தேயு 24 : 23,24). வேறொரு கிறிஸ்துவைப் பற்றியும், வேறொரு ஆவியைப் பற்றியும், வேறொரு சுவிசேஷத்தைப் பற்றியும் போதித்து, தங்களை அப்போஸ்தலர்களென்றும், ஊழியர்கள் என்றும் காட்டிக் கொண்டவர்களைப்பற்றி பவுல் கூறினார். மேலுமாக இவர்களின் உண்மையான தோற்றத்தை பவுல் தோலுரித்துக்காட்டுவதைப் பாருங்கள்: ''அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத்தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே: அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்''.

இப்போது, ஒரு கள்ளப் போதகனின் அடையாளங்கள் சிலவற்றை நாம் காண்போம். வெகு காலத்திற்கு முன்பே, மோசே தேவனுடைய வார்த்தைகளை எழுதினார்; ''சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கத்தரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கத்தரிசியும் சாகக்கடவன். கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில், ஒரு தீர்க்கத்தரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கத்தரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்பட வேண்டாம்'' (உபாகமம் 18;20-22). அன்று தேவன் கூறிய வார்த்தைகள் இன்றும் பொருந்தும். கிறிஸ்துவின் வருகைக்கு நாள் குறிப்பிட்டுச் சொல்லுவது அல்லது வியாதிக்காரரை அற்புதமாக சுகமளிப்பதாக அறைகூவல் விடுதல், இன்னும் மனிதனால் செய்ய இயலாத எத்தனையோ பல காரியங்களை தாங்கள் செய்வதாகக் கூறித் திரியும் பலரை இன்று நாம் காண்கிறோம். அவர்கள் கூறுவது போல நடவாமற் போனால் (நடப்பதும் இல்லை) அவர்களை கள்ளப் போதகர்கள் என அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

''வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்'' என கலாத்தியருக்கு அப்போஸ்தலன் பவுல் கூறினார். (கலா. 1:7-9). கிறிஸ்துவின் நற்செய்தியானது சுவிசேஷத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அந்த நற்செய்தி அமைந்துள்ளதாக பவுல் கூறுகிறார். (1 கொரி. 15; 1—4), கிறிஸ்துவை விசுவாசித்தல், நமது எல்லா பாவங்களுக்காகவும் மனஸ்தாபப்படுவது, கிறிஸ்துவை தேவனின் குமாரன் என அறிக்கை செய்வது பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெறுவது ஆகியவைகளே நற்செய்தியின் கட்டளைகளாகும். (மாற்கு 16:16; ரோமர் 10:10; அப். 2:38). மேலே கூறப்பட்டவைகளுக்கு மாறுபாடானவற்றை ஒருவன் போதித்தால் அவன் கள்ளப்போதகன்,

ரோமாபுரிக் கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதியதைப் பாருங்கள்: ''அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினை களையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்'' (16:17,18).

மேலுமாக, வேதாகமத்தில் காணப்படாத பெயர்களில் சபைகளை அமைத்துக் கொண்டு அவற்றில் அங்கம் வகிப்போர் யாவரும் கள்ளப் போதகர்களே. கிறிஸ்து தனது சபையைக் கட்டினார் என சுவிசேஷம் போதிக்கிறது. (மத். 16:18) அது ஒரே சபை எனவும் (எபே. 4:4; கோலோ. 1:18) அவருடைய நாமத்தை அச்சபை அணிந்துள்ளது எனவும் (ரோமர் 16:16; அப். 11:26) வசனங்கள் கூறுகின்றன.

தனிப்பட்டமுறையில் தங்களுக்கு சில காரியங்களை தேவன் அடிக்கடி வெளிப்படுத்துவதாகவும், பரிசுத்த ஆவியானவரில் அபிஷேகம் அல்லது ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்று பெருமையாகக் கூறுவோரும், அந்நிய பாஷையில் பேசுவதாகவும், அற்புத 'அடையாளங்களை தாங்கள் செய்து கூன், குருடு யாவரையும் சுகப்படுத்தி வருவதாகவும் சுவரொட்டி விளம்பரங்களில் கொட்டை எழுத்துக்களில் தங்கள் பெயர்களோடு ''ரெவரெண்ட்'' என்ற தவறான அடைமொழிகளைச் சேர்த்து, சுய விளம்பரம் மூலம் சுகபோக வாழ்வுக்குத் தேவையான பணத்தை காணிக்கை என்ற பெயரால் அப்பாவிகளிடமிருந்து அபகரித்து அலையும் பலரையும், இன்று காணமுடிகிறது. இவர்கள் எல்லோருமே **கள்ளப் போதகர்களே!** வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் நமக்கு அருளப்பட்டுள்ளன. அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர் திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2 தீமோ. 3:16,17) அதாவது, கர்த்தருடைய வசனம் பூரணமாக நமக்குக்கிடைத்த உடன், அற்புதங்கள் செய்த காலம் முடிந்து போயிற்று 1கொரி. 13; யாக். 1:25). இன்று தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் நமது விசுவாசம் வலுப்பெறுகிறதே தவிர, அற்புதங்களைக் காணுவதால் அல்ல, (ரோமர் 10:17). மேலே குறிப்பிடப்பட்ட சக்தி-

களெல்லாம் தங்களிடம் உள்ளன என்று உரிமை கொண்டாடு-வோர் எல்லோரும் மனிதன் உருவாக்கிய பல பிரிவினை சபைகளிலே தங்களை இணைத்துக் கொண்டு, ஒருவொருக்கொருவர் எதிர் பிரச்சாரம் செய்து வருவதால், தேவனுடைய வல்லமை இவர்-களிடம் கிரியை செய்வதில்லை என்பது உண்மையும், உறுதி-யுமாகிறது.

''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கத் தரிசிகள் தோன்றியிருப்பதனால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்'' என யோவான் கூறினார். (1 யோவான் 4:1)

என் நண்பர்களே! ஏமாந்து போகாதீர்கள்! சத்தியத்தை அறிந்து கொள்ள தயவு செய்து தேவனுடைய வசனத்தை மட்டுமே நம்புங்கள். சுவிசேஷத்தைக் கவனமாக படித்து, அது கூறியபடி நடந்தால் மட்டுமே தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவீர்கள், கள்ளப் போதகர்களிடம் கவனமாக இருங்கள்.

J.C. Choate (தமிழாக்கம் ; எஸ்.எஸ். ராஜன்)

## கள்ளப் போதகர்கள் உஷார் !

* ''கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள்; அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்களைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட-ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிர-மான அழிவை வருவித்துக் கொள்வார்கள்.

* அவர்களுடைய கெட்ட நடவடிக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள் ; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்''

2 பேதுரு 2:4,2

# நான் என்ன செய்ய வேண்டும்?

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நியாய விசாரணை செய்த ஆளுநர் பொந்தியு பிலாத்து,....'' யூதருடைய இராஜா வென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் (மாற்கு 15:2)*

ரோமப் பிரபுக்கள் குலத்தில் தோன்றிய பொந்தியு பிலாத்துவை திபேரியு என்ற ரோமச் சக்ரவர்த்தி, அன்றைக்கு ரோமப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்த பலஸ்தீனா நாட்டின் யூதேயா மாநிலத்துக்கு ஐந்தாவது ஆளுநராக நியமித்திருந்தான். கி.பி. 26ல் இவன் ஆளுநராக நியமிக்கப்படு முன்னர், இவனைப் பற்றி நமக்கு அதிகமாய்த் தெரிந்து கொள்ள முடியவில்லை.

யூதேயா மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது ரோமைப் பட்டாளம் உட்பட மாநிலத்தின் முழு அதிகாரப் பொறுப்பும் இவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஒருவனை மரண ஆக்கினைக்கு உட்படுத்தவும், விடுவிக்கவும்கூட அதிகாரம் உண்டு. (யோவான் 19:10) அந்நாளில், யூதர்களுடைய உயர்மட்ட சமய சங்கமாகிய ஜனகரீம் சங்கத்தின் தீர்மானங்கள் கூட இவனுடைய அங்கீகாரம் இல்லாமல் அமுலுக்கு வரமுடியாது யூத சமயத்தின் உயர் பதவியாகிய பிரதான ஆசாரியனை (தலைமைக் குரு) நியமிக்கவும், தேவரலய வரவு செலவுக் கணக்குகளைக் கண்காணிக்கவும் அதிகாரம் உண்டு பிரதான ஆசாரியனுடைய விழாக்கால உடுப்புகள் கூட இவனுடைய பாதுகாப்பில் தான் வைக்கப்பட்டிருக்கும், பண்டிகை நாட்களிலும், சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் அவைகளை எடுத்து உபயோகித்து விட்டு, மீண்டும் இவனுடைய பொறுப்பில் வைத்துப் பாதுகாக்கப்படும்.

இவனுடைய ஆட்சியின்போது மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. இவன் ஒரு அகங்காரியாகவும், பிடிவாத குணமுள்ளவனாகவும், கோபக்காரனாகவும் இருந்திருப்பான் என்று தெரிகிறது. தேவையில்லாமல் இரத்தம் சிந்தும் கொடியவன் என்றும் தெரிகிறது. லூக்கா 13ஆம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களில் சொல்லப் பட்டுள்ள சம்பவம் இவனுடைய அராஜகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு. இந்நிகழ்ச்சியினால் யூதர்கள் வெகுண்டெழுந்தனர். அந்நாட்களில் கலிலேயாவை ஆண்டுவந்த ஏரோது மன்னனுக்கும் இவனுக்கும் பகை உண்டானதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று சொல்லுவாரும் உண்டு. (லூக் 23:12)

புதிய ஏற்பாடு இவனை ஒரு பலவீனமான் பாண்டம், கொள்கைப் பிடிப்பும், நீதியின் மேல் பசி தாகமற்ற ஒரு பச்சோந்தி என்றும், மக்களை மதியாதவன் என்றும் வர்ணிக்கிறது. இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்தது கூட யூதர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தைக் காட்டிலும், ரோமச் சக்கரவர்த்தியை திருப்திப்படுத்தவும், தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் என்று கருதுவாரும் உண்டு. இவனுடைய இறுதி நாட்கள் சமாதானம் இல்லாமலும் பரிதபிக்கப்படத்தக்கதாகவும் இருந்ததாகவும், தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இப்படிப்பட்ட கொடியவனிடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நியாய விசாரணைக்கு நிற்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை காலத்தின் கட்டாயமே. அவனுடைய நீதிக்குப் புறம்பான—சட்டத்தையும், நியாயத்தையும் மதியாமல் செய்த நியாய விசாரணையை மறு சீராய்வு செய்து, அவனுடைய பலவீனங்களையும் குறைகளையும் கண்டறிந்து நம்முடைய வாழ்க்கையில் அவ்விதமான தவறுகளைக் களைய முயல்வோம்.

பிலாத்துவினிடத்தில் நல்ல குணங்கள் என்று ஒன்றுமே இல்லையென்று தீர்மானமாகக் கூறிட முடியாது. இயேசு நிரபராதி என்றும் (லூக் 4:14,15) அவரைப் பிரதான ஆசாரியர்களும் ஜனத்தின் மூப்பரும் பொறாமையினால் ஒப்புக் கொடுத்தார்கள் என்றும் (மத் 27:17; மாற்கு 15:9) அறிந்தும் இருந்தபடியால் அவரை எப்படியாவது விடுதலை செய்ய வேண்டும் என்று முயற்சித்தான். பண்டிகை நாட்களில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை செய்ய வேண்டும் அல்லவா? அதைப் பயன்படுத்தி, இயேசுவைக் கண்டித்து விடுதலை செய்கிறேன் என்று (லூக் 23;16) அவரை வாரினால் அடித்து இம்சித்தால் ஒருவேளை அவர்கள் மனமிரங்கி, விடுதலை செய்விக்க இணங்குவார்கள் என்று எண்ணி, வாரினால் அடிக்க உத்தரவிட்டான். அவைகள் ஒன்றும் பயன்தரவில்லை என்ற நிலையில் தான் மரணத்துக்கு ஒப்புக் கொடுத்தான். பாவம்', நிர்ப்பந்தம்! அவன் என்ன செய்வான்? என்று சிலர் பரிதாபப்படுவர். ஆனால் நாம் ஒன்றை மறந்து விடக்கூடாது. அவன் என்னையும் உங்களையும் போல பொதுமக்களில் ஒருவன் அல்ல. அவன் கையில் அதிகாரம் இருந்தது. ஒருவனுக்கு நன்மை செய்யத் திராணி இருக்கும்போது, அதைப் பயன்படுத்தாமல் கோழைத்தனமாக எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பது எப்படி நியாயம் ஆகும்? ஊரார்

விரும்பவில்லை. அல்லது எதிர்க்கிறார்கள் என்பதால் நீதியின் செங்கோலை வளைப்பது நெறியாகாது—அது சமுதாயத்தைச் சீர் குலைத்துப்போடும். உலகம் பொல்லாங்கனுக்குள் சிக்கிக் கொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறது. கொள்கைப் பிடிப்போடும், தர்ம நியாயங்களில் நம்பிக்கை வைத்து, அநியாயத்தை, எதிர்த்து நீதியை நிலை நாட்ட எதிர் நீச்சல் போடும் தைரியமும் மன உறுதியும் தேவை. உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கும் அநேகரிடத்தில் அது இல்லாததால் தான் சமூகம் சீர்குலைந்து கீழ்நோக்கிப் போய்க்-கொண்டிருக்கிறது: நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். சிறைக்குள் இருக்க வேண்டிய பலர் வெளியே பெரிய மனிதர்கள் வேடத்தில் உலா வந்து கொண்டிருக்கிறார்கள், இந்நிலை மாறவேண்டும்.

பிலாத்துவுக்கு இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பது மெய்தான். ஆனாலும் நிர்ப்-பந்தத்துக்கு அடிபணிந்து நிரபராதியைக் கொலைக்கு ஒப்புக்-கொடுத்து விட்டானே! சில சமயங்களில் நம்முடைய தோல்விக்குக் காரணம், நாம் முயற்சியே செய்யவில்லை என்பதல்ல. போதுமான அளவு முயற்சி எடுத்து தீவிரமாகப் போராடாததுதான் காரணம். நிர்ப்பந்தம் தாங்க முடியாமல் கடமை தவறிவிட்டானேயன்றி மற்றபடி அவன் நல்லவன் தான் என்று யாரும் அவனுக்காக அனுதாபப்பட முடியாது. அதே போல நம்முடைய வாழ்க்கையிலும் சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறபடியால் நான் இன்னும் பாவத்தில் உழன்று கொண்டிருக்கிறேன் என்று கூறி, நாம் தப்பித்துக் கொள்ளமுடியாது

அவனுடைய உள்ளத்தில் நியாய உணர்வுகள் படியாமற்-போனதுக்கும், சிறந்த பண்புகள் உருவாகாமற்போனதுக்கும் அவனுடைய வளர்ப்பு முறையே காரணம் என்று கூடச் சொல்லலாம். சாலமோனின் நீதி மொழிகள் கூறுவதைக் கவனித்தால் இது உண்மை என்று விளங்கும். ''பிள்ளையாண்டான் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்.'' (நீதி 22;6) என்று கூறுகிறது. ஆம் நண்பர்களே! யோசேப்பும், மோசேயும் யோசுவாவும், தானியேலும் சான்றோர்களாகவும், கொள்கைப் பிடிப்புள்ளவர்களாகவும், தீமைக்கும், பாவத்துக்கும் விலகி நின்று உயர்ந்ததற்கு, அவர்களுக்கு இளம் பிராயத்தில் போதிக்கப்பட்ட நீதி போதனைகளும், நற்பண்புகளுமே காரணம். ஒழுக்கம் என்பது ஒரு நாளில் கற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. சிறிது சிறிதாக, கொஞ்சம் கொஞ்சமாக பிஞ்சு உள்ளங்களில் செலுத்தப்பட வேண்டும். நாம் நம்முடைய குழந்-தைகளுக்குக் கிறிஸ்தவ அறநெறிகளைச் சிறு பிராயத்திலிருந்தே

போதிக்கிறோமா? அப்படிச் செய்யாமற் போனால் நாம் அநேக பிலாத்துகளைப் பெற்று நாட்டு நலனைக் கெடுக்கிறோம் என்று பொருள்,

மேலும் அவன் நீதியையும், நியாயத்தையும் கடைப்பிடிப்பதினால் கிடைக்கும் தேவ ஆசீர்வாதத்தை விட மனுஷரால் புகழப்படுவதற்கும் சமுதாய அந்தஸ்துக்கும் அதிக மதிப்புக்கொடுத்தான் (யோவான் 12:43) நியாயத்தைச் செய்வதை விட ஒரு சில மக்களால் நல்லவன் என்று பாராட்டப்படுவதை விரும்புகிற மக்கள் நம்மிடையேயும் கணிசமான பேர் வழிகள் உண்டு உலகத்தை நேசித்து, ஆத்துமாவை அலட்சியப்படுத்துவதற்கு நாம் தயங்குவதில்லை. அரிசியைக் குப்பையில் கொட்டி விட்டு உமியைப் பத்திரப்படுத்தி வைக்கிற இச்செயலை நாம் என்று கைவிடுமோ ''மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?, (மத் 16:26) என்று இயேசு பெருமான் கேள்வியை அறிந்த பிறகும் தம்மை மாற்றிக் கொள்ள விருப்பமில்லாமல் காலம் கடத்துகிறோம். எந்தப் பொருளுக்கும் ஒரு விலையுண்டு அப்படியிருக்க, நீங்கள் விலை ஒன்றும் கொடுக்காமல் நல்லவன், நீதிமான் என்ற பெயரை எப்படிச் சம்பாதிக்க முடியும்? பிரச்சனை, எதிர்ப்பு இல்லாமல் இருந்தால் நான் கிறிஸ்தவன். உபத்திரவம் சிக்கல் என்று வந்தால் நான் வளைந்து கொடுப்பது தான் விவேகம். நான் பேதுருவைப் போல ஒரேயடியாய் மறுதலிக்க வில்லையே ஆலயத்துக்குச் செல்கிறேன். வேதம் வாசிக்கிறேன், பல ஊழியர்களுக்குக் காணிக்கை அனுப்புகிறேன். படிக்கிறனோ இல்லையோ, இரண்டு மூன்று பத்திரிக்கைகளுக்குச் சந்தா அனுப்புகிறேன், ஆனால் ஒன்று: சில விக்கிரகங்களைப் பூஜை அறையில் வைத்திருக்கிறேன். ஆனால் வணங்குவதில்லை. சும்மா, பூஜை போடுகிற மாதிரி நடிப்பேன். என்ன செய்யட்டும்! என் சூழ்நிலை அப்படி இல்லையென்றால் பிழைப்பு நடக்காது என்று சமாதான விளக்கம் கொடுப்பார்கள். அப்படிப் பட்டவர்கள் தானியேல் புத்தகத்தை ஜெபத்துடன் வாசித்துத் தியானிக்க ஆலோசனை கூறுகிறேன்

மற்றவர்கள் ஒத்துழைத்தால், இசைந்து வந்தால் என்னால் நன்மை செய்ய முடியும் என்பது போல் பிலாத்து நடந்து கொண்டான். யூதர்கள் ஒத்துக் கொடுத்திருந்தால் இயேசுவை விடுதலை செய்திருப்பேன் — நியாயம் என்பது ஒரு நித்திய நெறி. அதற்கு மெஜாரிடி தேவையில்லை ஆகையால், மற்றவர்கள் இசைந்து வராதினால் தான் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று புலம்பாதே, தீமை செய்யத் திரளான ஜனங்களைப் பின்பற்றாதே

என்ற தேவ எச்சரிப்பைக் கவனி. (யாத் 23: 2) ''நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்'' என்று கூறிய யோசுவாவின் சீரிய முன் மாதிரி எப்பொழுதும் உங்கள் கண்முன் நிற்கட்டும்; உங்கள் காதுகளில் ஒலிக்கட்டும். (யோசு 24: 15)

பிலாத்து தான் செய்ய வேண்டிய கடமையைத் துணிந்து செயலாற்றாமல் வேறு எவரையாவது பொறுப்பாக்கி விட்டு தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணினான். அதனால் இயேசு-வை சம்பந்தமில்லாத ஏரோதிடமும், பொறாமை நிறைந்த யூதச் சமயத் தலைவர்களிடமும், அவர்களால் ஏவி விடப்பட்ட மக்கள் திரளிடமும் பிரச்சனையைக் கொண்டு சென்றான். அதன் மூலம் அவனுடைய மனக்குழப்பத்தை வெளிக் காட்ட முடிந்ததேயன்றி பெரிய நன்மை ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. கையைக் கழுவிக் கொண்டான், உண்மை. ஆனால் அவன் மனதில் படிந்து கிடந்த நியாயக் கேட்டைத் துடைத்துப் போட முடியவில்லையே.

பிலாத்து, இயேசு நிரபாரதி என்று தெரிந்து கொண்டு, கசை அடிகொடுத்து துன்புறுத்துவதின் மூலம் மக்களின் இரக்கத்தைப் பெற்று சமரசம் செய்ய முற்பட்டான். நீதியும், சத்தியமும் சேத-மடையாமல் சமரசப்படுத்த முடியாதவைகள். அப்படிச் செய்ததால் நீதி வளைந்து போனது; சத்தியம் புரண்டு போனது. விளைவு? நிரபராதி மரத்தில் தொங்கினார். நாம் கூட சத்தியத்தையும், உலகியல் கோட்பாட்டையும் சமரசப்படுத்த முயலுகிறோம். விளைவு? மனிதரிடம் மதிப்பு, கர்த்தரிடம் கசப்பு.

பிலாத்து உலக ஸ்நேகத்தை நீதிக்கு மேலாகக் கருதினான். ''இயேசுவை விடுதலை செய்தால் நீ சீசருக்கு நண்பன் அல்ல என்று மிரட்டியவுடன் பணிந்தான், எது பெரியது? தேவ நீதியை நிறை வேற்றுவதா? சீசரின் (சக்கரவர்த்தியின்) சபாஷா?'' ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லு கிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். (மத் 10: 28) என்கிற சத்தியங்களையும் பிலாத்து கற்பிக்கப்பட்-டிருந்தானானால் அவன் தீர்ப்பு வித்தியாசமாக இருந்திருக்கும், உலக வரலாறும் திசை மாறியிருக்கும்.

நியாயத்தை செய்வதற்குப் பிலாத்துக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறி விட்டான்.

அவன் மனைவி உதவிக்கு வந்தாள் (மத் 27: 19.) இயேசுவே கூட ஒத்துழைத்தார். ஏரோதிடம் பேசாது மௌனம் சாதித்தவர்;

பிலாத்துவோடு பேசினார், ரோம சாம்ராஜ்யத்துக்கு எதிராக ஒரு யூத இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முனைகிறாரோ என்ற பயத்தைப் போக்க ''என்னுடைய இராஜ்ஜியம் இந்த உலகத்துக்குரியதல்ல என்றார்'' (லூக் 23: 3, 9; யோவான் 18: 36).

வாழ்க்கையில் முக்கியமான தீர்மானம் எடுப்பதற்கு மற்றவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக் கொண்டிருந்தான். ''நான் இயேசு கிறிஸ்துவை என்ன செய்ய வேண்டும்? இந்தக் கேள்விக்கு நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக பதில் அளிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். எதற்கும் என் பெற்றோரைக் கலந்து கொண்டு முடிவு சொல்லுகிறேன். என் சகோதரனுடைய அபிப்பிராயம் வேறு விதமாக இருக்கிறது. என்று தயங்குபவர்களை நாம் பார்க்கிறோம். ஆனால் இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் தேவன் ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கணக்குக் கேட்பார். (ரோமர் 14: 12; 2 கொரி 5: 10) ஆகவே, நீ தீர்மானி, நீ பதில் அளி! மற்றவர்களைச் சார்ந்து நிற்காதே. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டவர்களுக்குப் பேதுரு அளித்த பதில்: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப் 2: 37, 38) இன்றைக்கும் என்றைக்கும் அதுவே பதில். நீங்கள் அப்படிச் செய்யாமல் இருந்தால் இன்றே சிந்தியுங்கள், செயல்படுங்கள்.

**E. Z. செல்வநாயகம்**

---

## ஞானத்தைச் சம்பாதி

- ''ஞானத்தை சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.
- அதை விடாதே, அது உன்னை தற்காக்கும்; அதின் மேல் பிரியமாயிரு, அது உன்னைக் காத்துக்கொள்ளும்.
- ஞானமே முக்கியம், ஞானத்தை சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியை சம்பாதித்துக் கொள்.
- நீ அதை மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும்; நீ அதைத் தழுவிக் கொண்டால், அது உன்னைக்கனம் பண்ணும்.

*நீதிமொழிகள் 4:5-8*

# ஜெபம் செய்ய குழந்தைகளுக்குக் கற்றுத் தருவோம்

நமது இருதயத்திலிருந்து தேவனோடு பேசுவதே ஜெபம். ஆண்களைப் போன்று ஜெபம் செய்யும் உரிமை பெண்களுக்கும் உண்டு என்பதும், தேவன் நமது ஜெபங்களை ஏற்றுக் கொள்கிறார் என்பதும் நாம் அறிந்ததே. வீட்டில், கணவர்களை விட பெண்கள் குழந்தைகளுடன் அதிக நேரத்தைக் கழிப்பவர்களாக இருக்கும் காரணத்தால், ஆவிக்குரிய போதனைகளையும் பயிற்சிகளையும் குழந்தைகளுக்கு அளிக்கும் பொறுப்பில் பெரும் பகுதி பெண்களையே சாரும்.

அரசர்களையோ அல்லது அமைச்சர்களையோ சந்திக்க இவ்வுலகில் சில சட்டங்களும் கட்டுப்பாடுகளும் உள்ளது போல, நமது தேவனை சந்திக்க வேதாகமச் சட்டங்கள் உள்ளன. நாட்டை ஆளுவோரை அணுகி, நமது உலகத்தேவைகளைப் பெற்றிட சில சட்டங்கள் உள்ளது போல, தேவனிடம் நமது தேவைகளுக்காக அணுகவும் சில கட்டுப்பாடுகள் உள்ளன.

கடற்பஞ்சு தண்ணீரை எவ்வாறு தன்னுள் உறிஞ்சுக் கொள்ளுகிறதோ, அவ்வாறே தங்களுக்குக் கற்பிக்கப்படும் எவற்றையும் ஏற்றுக் கொள்ளும் குணம் படைத்தவர்கள் குழந்தைகள், எனவே தான், தேவனைப் பற்றியும் அவருடைய வசனத்தைப் பற்றியும் மிகவும் சரியான காரியங்களை மட்டுமே குழந்தைகளுக்கு போதிப்பதில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு சரியான முறையில் ஜெபம் செய்யக் கற்றுத் தருவதென்பது பெற்றோர்களின் மிக முக்கிய பொறுப்பாகும்.

சில சமயங்களில் பெற்றோர்களே ஜெபத்தைப்பற்றி தெளிவற்றவர்களாக இருக்கின்றனர், ஜெபம் செய்வது எப்படி, தெற்காக ஜெபிப்பது, அல்லது ஜெபங்களுக்கான பதிலை தேவனிடமிருந்து எதிர்பார்ப்பது எப்படி என்ற வினாக்களுக்கு விடை எதரியாத பெற்றோர்கள் பல உண்டு. ''உனக்குத் தேவையானதை தேவனிடம் கேள்'' என குழந்தைகளுக்கு உபதேசிக்கும் பெற்றோர்களைக் காண முடியும். இது எவ்வளவு ஆபத்தான உபதேசம் என்பதை அவர்கள் உணருவதில்லை. தான் கேட்பது கிடைக்காமற் போனால் தேவனே அதற்குப் பொறுப்பு என்ற முடிவுக்கு குழந்தை

வந்து விடுகிறது. விளைவாக, தனது விசுவாசத்திலிருந்து அக் குழந்தை வழுவிப்போகக் கூடும். எனவே தான் எத்தகைய ஜெபங் களை தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார், எத்தகைய ஜெபங்களுக்கு அவருடைய பதிலை எதிர்பார்க்க இயலாது என்னும் காரியங்-களைப் பற்றி குழந்தைகளுக்கு மிகவும் கவனமாக விளக்கிக் கூற வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு.

முதலில், தேவனிடம் நமது அணுகுமுறை அமையவேண்டிய விதம் எப்படி? கிறிஸ்தவர்களுக்கும் தேவனுக்கும் ஒரு கூட்டுக் குடும்ப உறவு உள்ளது. உலகப்பூர்வமாக நாம் பார்க்கும்போது ஒரு அந்நிய மனிதனிடம் ஒரு குழந்தை உரிமையோடு எதையும் கேட்க இயலாது. அதே போலவே தனது சொந்தக்குழந்தைகளைத் தவிர வேற்றுக் குழந்தைகளுக்கு எந்த உரிமையையும் அளிக்கும் கட்டாயமும் ஒரு மனிதனுக்கு இல்லை. கருணையால் அவன் எதை யும் செய்யக்கூடுமே தவிர, கட்டாயத்தினால் அல்ல. வேதாகமம் கூறுவதைப் பாருங்கள் : ''. . . . அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்'' (மத் 5:45)

நமது பரலோகத் தந்தையாகிய தேவனை அணுக வேண்டு-மானால், நம்மில் வயது வந்தவர்கள் அவருடைய குழந்தைகளாக மாற வேண்டும். அவருடைய குமாரன் இயேசுகிறிஸ்துவை விசு-வாசித்து, அவருடைய நற்செய்திக்குக் கீழ்படியும் போது நாம் தேவனுடைய குழந்தைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகிறோம். ''நீங்களெல்லோரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தி-னால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள்'' (கலா 3:26) நமது பாவ வாழ்க்கையிலிருந்து விடுபடுகிறோம். ''அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லோருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப் 17:30) அவர் தேவனுடைய குமாரன் என்ற விசுவாச அறிக்கையை நாம் அறிவிக்க வேண்டும். ''மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்'' (மத் 10:32) என இயேசு கிறிஸ்து வாக்களித்-துள்ளாரே? பின்னர், ஞானஸ்நானத்தின் வழியாக தண்ணீருக்குள் அவரில் அடக்கம் செய்யப்பட்டு நமது பாவங்கள் நீங்கக் கழுவப் படுகிறோம் ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமை-யினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போலநாமும்

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்'' (ரோமர் 6:3,4)

மேற்கண்ட கட்டளைகளைக் கடைபிடிக்கும் தகுதி குழந்தைகளிடம் கிடையாது. கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களாகவும், தங்கள் பாவங்களிலிருந்து விடுபட்டு புதியதோர் வாழ்க்கைக்குத் திரும்புவோராகவும், கிறிஸ்துவை தங்கள் சொந்தஇரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும் தகுதி படைத்தவர்கள் வயது வந்தவர்களாகத் தான் இருக்க முடியும் இவை குழந்தைகளால் முடியாத காரியங்கள் அப்படியானால். குழந்தைகளுக்கு தேவன் ஏற்படுத்தியவழி என்ன? தேவனை அவர்கள் அணுகுவது எப்படி? அவர்கள் ஜெபம் செய்யக் கூடுமா? பெற்றோர்கள் குழந்தைகளுக்கு என்னபோதிக்கவேண்டும்?

''சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடை பண்ணாதிருங்கள், பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது'' (மத் 19:14) எனக் கூறிய இயேசு, தன்னைப் பின்பற்றுவோரின் குணநலங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை தனது சீடர்களுக்குக் கற்பிக்க விரும்பிய இயேசு ஒரு சிறு குழந்தையை அழைத்து அவர்கள் நடுவிலே நிறுத்தினார். பின்னர் அவர்களை நோக்கிக் கூறினார். ''நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்த பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாக இருப்பான் ...... இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப் போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல'' (மத். 18: 3, 4, 14).

குழந்தைகள் தேவனிடத்தில் பாதுகாப்பாக இருப்பதையே மேற் குறிப்பிட்ட வசனப்பகுதிகள் தெளிவாக்குகின்றன. நன்மை, தீமைகளின் பாகுபாடுகளை அறியும் வயதை அடையும் வரை, தேவனுடைய சொந்தக் குழந்தைகளாக அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுடைய ஜெபங்களுக்கு தேவன் செவி சாய்க்கிறார். சிறு வயது முதலே குழந்தைகளுக்குத் தங்களுடைய பரலோகத் தந்தையிடம் ஜெபம் செய்யும் விதத்தைக் கற்றுத்தரவேண்டியது பெற்றோர்களின் கடமையாகிறது.

எப்படி, எதற்காக குழந்தைகளுக்கு ஜெபம் செய்யக் கற்றுத் தர வேண்டும்? அவர்களுடைய ஜெபத்தின் பதிலை அறிவது

எப்படி? ஜெபங்களைப் பற்றிய தவறான கருத்துக்களை குழந்தைகளின் மனதில் விதைத்து விடாமல் பாதுகாப்பது எப்படி?

''எனக்குக் கீழ்படியாத உன்னை தேவன் தண்டிப்பார்'' என அடிக்கடி தனது சிறு மகனிடம் கூறும் தாய், அவனுக்குக் கற்றுத் தருவது என்ன? தேவனிடத்தில் அன்பை எதிர்பார்ப்பதற்கு மாறாக பயத்தை அல்லவா எதிர்பார்க்கக் கற்றுத் தருகிறாள் அந்தத் தாய். அச்சிறுவனுக்கு தேவனிடத்தில் பயமும் பாதுகாப்பற்றத் தன்மையுமே ஏற்படும்.

நமது குழந்தைகளுக்கு எதைக் கற்றுத் தர வேண்டும்? தேவன் நமது பரலோகத் தந்தை, நமது ஆவிக்குரிய தந்தை என்பதைச் சொல்ல வேண்டும். ''உங்களில் எந்த மனிதனானாலும் தன்னிடத்தில் அப்பத்தை கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?'' ———— ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?'' என இயேசு ஒரு சந்தர்ப்பத்திலே கேட்டார். (மத். 7:9,11) எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய அன்பு பற்றியும், குழந்தைகளின் நலனில் அவர் தொடர்ந்து காட்டி வரும் அக்கறைபற்றியும் கூறி குழந்தைகளின் ஆழமான விசுவாசத்தைக் கட்டிக் காக்கவேண்டும்.

குழந்தைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டிய பொறுப்பை தேவன் பெற்றோர்களிடம் கொடுத்துள்ளார்'' பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து'' என நீதிமொழிகள் 22:6ம் வசனம் கூறுகிறது. ''பிள்ளையை தண்டியாமல் விடாதே....'' என பெற்றோருக்கு அறிவுரை தரப்பட்டுள்ளது (நீதி 23 : 13). ''எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் என்பதாக எபிரேயர் 12:11வது வசனம் விளக்குகிறது. பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம் என குழந்தைகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது (எபி 6:1) பெற்றோருடைய கடமையையும் நாம் தேவ வசனத்திலே பார்க்கிறோம், ''பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'' (எபே 6:4)

குழந்தைகளிடம் அன்பும் அக்கறையும் செலுத்தி பெற்றோர்கள் அவர்களை நல்வழியில் நடத்தும்போது, ஆவிக்குரிய குடும்பத்தில் தேவனை தங்கள் தந்தையாகவும், அவருடைய குமாரன் இயேசுவை தங்களுடைய சகோதரனாகவும் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றனர். அன்பும் பரிசுத்தமுமான குடும்ப சூழ் நிலையில் வளரும் குழந்தைக்கு ஆவிக்குரிய அன்புள்ள தந்தையுடன் இயற்கையான நல்லுறவு ஏற்படுகிறது. ஆவிக்குரிய குடும்பத்தில் கிறிஸதவர்களாகிய நாம் ஒரு அங்கம் என்பதை நன்கு புரிந்து கொள்ளவே, இவ்வுலகில் தேவன் குடும்பத்தை உருவாக்கினார்

ஜெபத்தைப் பற்றிய தவறான கண்ணோட்டத்தையும் நாம் காணமுடிகிறது. அனில் எனும் சிறுவன் தனது பள்ளிப்பாடங்களை சரியாகப் படிப்பதில்லை. ஆனால் தேர்வு காலத்தில், தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்று ஜெபம் செய்யமட்டும் தவறுவதில்லை. இதில் வருத்தப்பட வேண்டிய காரியம் என்னவென்றால் தேர்வுகளில் அனில் அநேகமாக வெற்றி அடைவதில்லை. ''என் ஜெபங்களை தேவன் ஏன் கேட்கவில்லை?'' என்பது அவனுடைய கேள்வி.

ஆனால், தனது பாடங்களை படிக்க வேண்டிய பொறுப்பு அனில் உடையதல்லவா? அவனுக்குப் பதிலாக, பாடங்களை தேவன் படிப்பதாக அவனுக்கு வாக்களிக்கவில்லையே! சுறு சுறுப்பாக தனது பாடங்களைப் படித்து தேர்வுகளுக்குத் தயாராக வேண்டியது அனிலுடைய கடமை. சோம்பேறித்தனத்தை தேவன் ஆதரிக்கவில்லை

படித்த பாடங்கள் தனது நினைவில் நிற்கவும், பிரியமும் அனில் தேவனிடம் வேண்டிக் கொள்ளலாம். அவன் பெயவனாக வளர வளர தேவனோடு இது போன்ற உறவை அவன் தொடரலாம். அவன் படிப்பவை மனதில் தங்கவும், வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை அடையவும் தேவனுடைய உதவி அவனுக்கு நிச்சயம் கிடைக்கும் என நம்பலாம்,

தேவனுடைய சட்டங்களின்படி செய்யும் ஜெபம் நல்லதும் வல்லமையுள்ளதாகவும் இருக்கிறது என்னும் உண்மையை பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். அதே சமயத்தில், தேவன் வாக்களிக்காதவற்றை ஜெபத்தின் வழியாகப் பெற வாய்ப்பு எதுவுமில்லை என்பதையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். தவறான நம்பிக்கையை குழந்தைகளின் மனதில் விதைப்பது குற்றமும் ஆபத்தானதும் ஆகும். ஏனெனில் அத்தகைய நம்பிக்கை ஏமாற்றத்தை விளைவிக்கும்.

பெட்டிபார்ட்டன் சோட் ரேச்சல் ராஜநாயகம்

# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

''சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறினார். நாம் பாவங்களிலிருந்து விடுதலை அடைய விரும்பினால் சத்திய வசனங்களால் மட்டுமே அது சாத்தியமாகும் என்பதையே அவ்வாறு தெரிவித்தார். உலகின் வேறு எந்த சக்தியாலும் நம்மை விடுதலை யாக்க முடியாது அறியாமையும், தவறும் நம்மை அடிமைப்படுத்தி விடும்; ஆனால் சத்தியம் நம்மை விடுவிக்கும் சக்தி படைத்தது. ''சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே'' என அருமையாகச் சொன்னார் ஞானி சாலமோன் (நீதி. 23;53) சத்தியத்திற்காக எந்த விலை கொடுக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். ஒரு முறை சத்தியத்தை அறிந்து கொண்ட பின், உலகத்தின் எந்த ஆதாயத்திற்காகவும் அதை நாம் இழந்துபோகக்கூடாது ''சத்தியம் முழுமையான சத்தியம், சத்தியத்தைத்தவிர வேறு எதுவும் வேண்டாம்'' என்ற திடமான, திட்டவட்டமான முடிவில் நாம் செயல்படவேண்டும். ஏனெனில் சத்தியத்திற்கு மாற்று எதுவும் நமக்கில்லை.

மத உலகில் ஒரே ஒரு அளவைக் கொண்டுதான் சத்தியத்தை நிலை நாட்ட முடியும், எந்தக் காரியத்திலும் உண்மையைக் கண்டுபிடிக்க சில வரையறைகள் தேவைப்படுகின்றன. நேரம், சட்டம் அளவு போன்ற பல காரியங்களுக்கும் இது பொருந்தும். அந்த வரையறைகளை நிர்ணயிப்பது சட்டம். சட்டத்திற்குப் பின்னால் அதிகாரம் நிற்கிறது. மதத்தைப் பொறுத்த வரையில் தேவனே அதற்கு அதிகாரி அவருடைய வசனமே சத்தியத்தின் அளவு கோல் தேவனுடைய வசனத்திற்கு ஒத்துப்போகாத மாறன எதையும் நாம் போதித்தாலோ, அல்லது விசுவாசித்தாலோ அல்லது நடந்தாலோ அவை தவறான செயல்களாகும். நம்மை இரட்சிப்பதற்குப் பதிலாக அவை நம்மை பாதாளத்தில் தள்ளிப்போடுகின்றன. சத்தியத்தைப்பற்றி சபைக்கு ஒரு தீர்க்கமான அளவு கோலை இயேசு கிறிஸ்து கொடுத்துள்ளார். அதாவது, **வசனமே சத்தியம்.** (யோவான் 17:17)

தேவனுடைய வசனத்தில் காணப்படாத வேறு எந்த ஒரு அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்ட மத அமைப்பானாலும் அது சத்தியத்திற்கு மாறானது என்பதில் சந்தேகமில்லை மனிதனுடைய போதனைகளை ஏற்று நடப்பவரிலும் நல்லவர் பலரை நாம் காண முடிகிறது என்றாலும், மனிதனுடைய சட்டங்களை அங்கீகரித்து அவற்றை அதிகாரமாகப் போதிக்கும் ஒரு மதப் பிரிவில்

நல்லவர்கள், நாணயமானவர்கள் அங்கம் வகித்தாலும், தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறாத காரணத்தால், அவர்கள் தவறுக்குப் பலியாகிப் போகிறார்கள். அப்போஸ்தலன் பவுல் கூறியதைப் போல, நாமும் ''தேவனே சத்திய பரர் என்றும், எந்த மனிதனும் பொய்யன் என்றும் சொல்வோமாக ''(ரோமர் 3: 4)

சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுள்ள மனிதன் சில கட்டுப்பாடுகளுக்கும் கடமைப்பட்டுள்ளான். முதலாவதாக, மக்கள் **சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும்** என இயேசு கூறினார். ஒரு கால கட்டத்தில் மனிதனுடைய அறியாமையை அறியாதது போல இருந்த தேவன், இன்று உலகின் சகல பகுதி மக்களும் மனந்திரும்ப வேண்டும் என்று கட்டளையிடுகிறார். (அப். 17: 30). சத்தியத்தை எளிதில் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இன்று சகலருக்கும் தரப்பட்டுள்ள படியால், ''நான் சத்தியத்தை அறியேன்'' என எவரும் தேவனுக்கு முன்பாக நின்று சொல்ல இயலாது, விக்கிரக ஆராதனை, மனிதனின் பாரம்பரியங்கள், தனிப்பட்ட மனிதக் கருத்துக்கள் போன்ற யாவற்றையும் விலக்கி விட்டு, தேவனுடைய வசனத்தை மட்டுமே ஏற்றுக் கொள்ளும் நேர்மையான மனப்பக்குவத்தை நாம் பெற்றுக் கொள்ளும் போது சத்தியத்தை நாம் அறிந்து கொள்ள முடியும். தனது கண்களையும் காதுகளையும் வேண்டுமென்று இறுக மூடிக் கொள்ளும் ஒரு மனிதனால் மட்டுமே சத்தியத்தை ஒரு போதும் அறிந்து கொள்ள இயலாது. அவனை திருப்திப்படுத்த அசத்தியமான அநேக காரியங்கள் இவ் உலகில் இருக்கக் கூடும், சத்திய வசனங்களின் விளக்கங்களை அறிந்து கொள்ள ஒரு பாதிரியாரோ அல்லது போதகரோ கூட நமக்குத் தேவையில்லை. தேவன் தெளிவாகவும் குறிப்பாகவும் பேசுகிறார். சொல்லொன்று, செயலொன்று என்பது அவரிடம் இல்லை. நமக்கு ஆர்வம் இருந்தால் அவர் கூறும் வசனங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியும். வசனங்களைப் படிப்போம்; அவற்றைத் தியானிப்போம்.

சத்தியத்தை அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், நாம் **சத்தியத்தை விசுவாசிக்கவும்** வேண்டும். சத்தியத்தை விசுவாசியாதவர்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவர் என அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். (2 தெச 2: 12).

அடுத்து, நாம் **சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.** அப். பவுல் கூறுகிறார். ''தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ ''உபத்திரவமும் வியாகுலமும்'' உண்டாகும் ''ரோமர் 2: 6-5)

சத்தியத்தைப் பற்றிய உங்கள் நிலை என்ன?

**ராய் பீஸ்லி** **எஸ். எஸ். ராஜன்.**

# நமது கர்த்தரும், நமது விசுவாசமும்

லூக்கா புத்தகத்தின் 5வது அதிகாரத்தை நாம் படித்துப் பார்த்தால், ஒரு சுவையான நிகழ்ச்சி பற்றிய விவரங்களை அங்கு காணமுடியும். நடக்க இயலாத திமிர் வாதக்காரன் ஒருவனை சிலர் படுக்கையோடே எடுத்து வந்து அவனை இயேசுவின் அருகில் கொண்டு போக முயற்சிக்கின்றனர். ஆனால் அவரைச்சுற்றியிருந்த திரளான மக்கள் கூட்டத்தால் அது சாத்தியமற்றுப் போயிற்று. எனவே, உள்ளே செல்ல வகையறியாத அவர்கள் அவ்வீட்டின் மேல் ஏறி, கூரையைப் பிரித்து மேலிருந்தவாறே மக்கள் மத்தியிலிருந்த இயேசுவின் முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள். ''அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு'' என்பதாக 20-வது வசனம் கூறுகிறது. மனிதன்ஒரு வேளை அவர்களுடைய விசுவாசத்தின் ஆழத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியாதவனாக இருந்திருப்பான். ஆனால் இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டார். அதுபோலவே, நோவாவின் செயல்பாடுகளிலுள்ள விசுவாசத்தை மனிதன் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கக்கூடும்; ஆனால் எபிரேய எழுத்தாளன் அதை நன்கு புரிந்து கொண்டார். (எபி 11:7). ஆபிரகாமின் நீண்ட பயணத்தில் அவன் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் பேரில் மக்களுக்கு பலவேளைகளில் அவ நம்பிக்கை ஏற்பட்ட போதிலும், ஆபிரகாமின் விசுவாசத்தின் ஆழத்தை அறிந்து கொண்டு எபிரேய எழுத்தாளன் எழுதுகிறார். (எபி 11 : 8).

மேலே குறிப்பிட்டவர்களின் விசுவாசத்தை நமது கர்த்தர் உடனே அடையாளம் கண்டு கொண்டதைப் பற்றி நாம் மகிழ்ச்சி அடைய வேண்டாமா? நம்மில் விசுவாசத்தைக் காணும் கர்த்தர், அதை இனம் கண்டு கொள்ள ஒரு போதும் தவறுவதில்லை. அவரால் அது கூடும்.

நமது கர்த்தருக்கும் நமது விசுவாசத்திற்கும் ஊடே உள்ள நேரடி உறவை நாம் புரிந்து கொள்ளலாம்.

## நமது விசுவாசத்தின் பேரில் கர்த்தருக்குள்ள அக்கறை

உலக மக்கள் ஒருவர் மேல் ஒருவர் வைக்கும் நம்பிக்கை ஆழமற்றதாக இருக்கக் கூடும். ஆனால் நமது கர்த்தராகிய இயேசு

கிறிஸ்து நம் பேரில் வைக்கும் நம்பிக்கையோ அவ்வாறானதல்ல. பேதுருவை நோக்கி அவர் கூறுவதை கவனியுங்கள் : ''சீமோனே, சீமோனே, இதோ கோதுமையை சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன் .... ''(லூக்கா 22:31-32). பேதுருவின் விசுவாசத்தில் இயேசுவுக்குள்ள அக்கறை எவ்வளவு அதிகமாக இருந்தால், பேதுருவுக்காக ஜெபித்திருப்பார்? அது ஆழமானதாகவும் இருந்தது.

ஒவ்வொரு மனிதன் பேரிலும் தனிப்பட்ட, ஆழமான அக்கறை தனக்கு இருந்ததை, பேதுருவும் பிறரும் புரிந்து கொள்ள வேண்டுமென்று இயேசு விரும்பினார்.

தொடர்ந்து ஜெபம் செய்ய வேண்டியதின் அவசியத்தை பற்றிய ஒரு உவமையின் இறுதியில், நமது கர்த்தர் ஒரு கேள்வியைக் கேட்டார்: ''ஆகிலும் மனிதகுமாரன் வரும் போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார் ''(லூக்கா 18:8). அவருக்கு நம் பேரிலுள்ள அக்கறையை இது காட்டவில்லையா? விசுவாசத்தின் அவசியத்தை அவர் அறிந்தபடியால், அவருடைய அன்புமிக்க அக்கறையை நாம் காணமுடிகிறது (எபி. 17:6). மனித குமாரன் மீண்டுமாக வரும்போது உலக முடிவில் விசுவாசம் நிலைத்திருக்குமா என அவர் கவலைப்படுவது, நம் பேரிலுள்ள நீடித்த அக்கறையைக் காட்ட வில்லையா?

### அற்ப விசுவாசத்தை அவர் கண்டிக்கிறார்.

மத்தேயு புத்தகத்தின் முதல் பதினாறு அதிகாரங்களை நீங்கள் படித்து பார்த்தால் ''அற்ப விசுவாசம்'' என இயேசு கண்டித்து குறிப்பிடும் நான்கு நிகழ்ச்சிகளைக் காணலாம். இவை மத்தேயு 6;30; 8;26; 14:31, 16:8 ஆகிய வசனப்பகுதிகளில் விவரிக்கப்படுகின்றன.

ஒரு மனிதனுடைய சொத்து சுகங்கள், உணவு, ஆடம்பர வாழ்க்கை பற்றிய கவலைகளை முதல் நிகழ்ச்சி வர்ணிக்கிறது. அதாவது, அன்றாடம் ஒருவன் உண்ணும் உணவைப் பற்றியதும் உடையைப் பற்றியதுமான கவலை. மனிதனுடைய தேவைகளை தேவன் சந்திக்கிறார் என்ற உண்மையை மறக்கக்கூடிய நிலைக்கு மனிதனை மாற்றக் கூடிய கவலை. இப்படிப்பட்ட கவலையைத் தான் 'அற்ப விசுவாசம்' எனக் கூறினார். தனது பிள்ளைகளின் பேரில் தேவன் அக்கறையுள்ளவர் என்பதில் நம்பிக்கையற்ற தன்-

மையை இந்தக் கவலையானது தெளிவாக்குகிறது. ஆகாயத்துப் பறவைகளையும் காட்டுப் பூக்களையும் அக்கறையுடன் போஷிக்கும் தேவன், தனது பிள்ளைகளை இன்னும் அதிக அக்கரையுடன் கவனிப்பார் என்பது நிச்சயமல்லவா? அற்ப ஜீவன்களை அற்புதமாகக் காத்துவரும் தேவன் அவற்றைவிட அதிக மதிப்புள்ள மனிதனை அலட்சியப்படுத்திவிடுவாரா? இதை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

மூன்றாவது நிகழ்ச்சியில், கர்த்தரின் வார்த்தையில் சந்தேகப்பட்ட வினாடியில் கடலில் மூழ்கிக் கொண்டிருந்த பேதுருவை அவர் கண்டிப்பதைக் காண்கிறோம். (மத். 14:31) இறங்கி வா என கர்த்தர் அழைத்தபோது அவர் வார்த்தையை நம்பி படகை விட்டு இறங்கிய பேதுரு, கடல் தண்ணீரைக் கண்டபோது சந்தேகப்படுகிறான். அதுவே 'அற்ப விசுவாசம்'.

**கர்த்தர் ஆழமான விசுவாசத்தை பாராட்டுகிறார்**

ஆழமான விசுவாசத்தை கர்த்தர் பாராட்டும் இரு நிகழ்ச்சிகளை மத்தேயு புத்தகத்தில் காணலாம்.

முதலாவதாக, நூற்றுக்கு அதிபதி ஒருவனின் திமிர்வாதத்தால் வேதனைப்பட்ட வேலைக்காரனைப் பற்றியது. அவனை சுகப்படுத்த அவன் வீட்டுக்குச் செல்ல கர்த்தர் தயாரானபோது அந்த அதிகாரி கூறினான் ; "ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" (மத். 8:8). கர்த்தரின் வார்த்தையின் வல்லமையில் சிறிதும் சந்தேகப்படாத ஒரு மனிதனை இங்கு காண்கிறோம். ஆழமான விசுவாசத்தின் அடுத்த நிகழ்ச்சியை மத்தேயு 15:21-28 வசனப்பகுதியில் நாம் காணமுடிகிறது. இந்த இரு நிகழ்ச்சிகளிலும் நமது கர்த்தர் கூறியவற்றை விசுவாசித்து, அவர் விரும்பியவாறே செயற்பட்ட மக்களை நாம் பார்க்கிறோம். இவர்களின் அசைக்க முடியாத விசுவாசத்தை நமது ஆண்டவர் பாராட்டுகிறார். உங்கள் விசுவாசம் எப்படிப்பட்டது? சிந்திப்பீர்

**வின்பிரட் கிளார்க்** **S.S. ராஜன்**

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2: 5 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays 1- :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. MM. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

*கிறிஸ்வின் சபை, 2, மணல்மேடு வீதி,*
*ஈரோடு - 638 002.*

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

TO

PRINTED MATTER BOOK-POST

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.